ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2505/76 - 2026 සැප්තැම්බර් මස 09 වැනි බදාදා - 2026.09.09
2505/76 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி 5/2025

**2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டம்**

2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் சொல்லப்பட்ட சட்டத்தின் 48 ஆம் பிரிவின்கீழ் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட விதிகள்.

தவிசாளர்,
இலங்கைப் பொதுப் பயன்பாடுகள்
ஆணைக்குழு.

கொழும்பு,
2026, செத்தெம்பர் 08.

**விதிகள்**

1. இவ்விதிகள் 2026 ஆம் ஆண்டின் மின்சார (பாவனையாளரின் இன்னல்களை நிவர்த்திசெய்யும் அரங்கு) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

1A - PG 7967 - 203 (2026/09)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**பாகம் I**

**மின்சார பாவனையாளர்களின் இன்னல்களை நிவர்த்திசெய்யும் அரங்கினைத் தாபித்தல்**

2. உரிய நேரமொன்றிலானதும் பயனுள்ளதுமான முறையில் பாவனையாளர்களின் இன்னல்களை நிவர்த்திசெய்வதற்கான தளமொன்றை விளிப்பதற்கும் வழங்குவதற்குமான (இதனகத்துப்பின்னர் "அரங்கு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "மின்சார பாவனையாளர்களின் இன்னல்களை நிவர்த்திசெய்யும் அரங்கு" என அழைக்கப்படவும் அறியப்படவும் வேண்டிய அரங்கொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

3. (1) உரிமம் பெற்றவர், (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன், ஒவ்வொரு அரங்குகளின் நோக்கெல்லையின்கீழும் வரவேண்டிய அத்தகைய அரங்குகளின் எண்ணிக்கையையும் அமைவிடங்களையும் மற்றும் உரிமம் பெற்றவரின் வழங்குகை இடப்பரப்புகளையும் தீர்மானித்தல் வேண்டும்.

(2) அரங்குகளின் எண்ணிக்கை மற்றும் அமைவிடத்தைத் தீர்மானிப்பதில், உரிமம் பெற்றவர் பின்வருவனவற்றை முறையாகக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(அ) உரிமம் பெற்றவரினால் சேவையாற்றப்படும் பாவனையாளர்களின் எண்ணிக்கை; அத்துடன்

(ஆ) உரிய நேரத்தில் இன்னலை நிவர்த்திசெய்தலை உறுதிப்படுத்துவதற்கு போதியளவான அரங்குகளின் எண்ணிக்கை.

4. (1) அதே அரங்கு, அரங்குக்கு சமர்ப்பிக்கப்பட்ட இன்னல்களின் எண்ணிக்கை மற்றும் தன்மையின் அடிப்படையில், பாவனையாளருக்கும் உரிமம் பெற்றவருக்கும் வசதியான இடமொன்றில் இன்னலைத் தீர்மானிப்பதற்கான எவையேனும் எண்ணிக்கையிலான கூட்டங்களை நடாத்தலாம்.

(2) அரங்கு கள பரிசோதனையானது இன்னலின் நிவர்த்திக்கு வசதியளிக்கும் சாத்தியமுடையதாகவிருக்குமிடத்து, அத்தகைய பரிசோதனையொன்றை நடாத்தலாம்.

5. (1) அரங்கமானது உரிமம் பெற்றவரினால் நியமிக்கப்பட்ட பின்வரும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) (இதனகத்துப்பின்னர் "தவிசாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அரங்கின் தவிசாளர் (2) ஆம் உபவிதிக்கிணங்க, பின்வரும் ஆட்களுக்கிடையிலிருந்து உரிமம் பெற்றவரினால் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்:-

(i) அரசாங்கத்துடன் பதிவுசெய்யப்பட்ட உயர்தொழில்சார் கழகமொன்றின் உறுப்பினரொருவர்;

(ii) ஓய்வுபெற்ற சிரேஷ்ட பகிரங்க அலுவலரொருவர்; அல்லது

(iii) ஓய்வுபெற்ற நீதி அலுவலரொருவர்;

(ஆ) உரிமம் பெற்றவரின் அலுவலகத்தில் சேவையாற்றுகின்ற நிறைவேற்று பணியாட் தொகுதியிடையிலிருந்து ஆளொருவர் அல்லது பொறியியல் உயர்தொழில்சார் ஒழுங்கமைப் பொன்றில் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர்; அத்துடன்

(இ) ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் பதவி நிலைக்குக் குறையாத பதவியொன்றை அல்லது பாவனையாளர் வழக்கறிஞர் பதவியை வகிக்கின்ற அலுவலரொருவர்.

(2) உரிமம் பெற்றவர், (1) ஆம் உபவிதியின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஆட்களிலிருந்தான விண்ணப்பங்களின் கோரல் மற்றும் கவனத்திற்கொள்ளுதல் செயன்முறையொன்றினூடாக மூன்று ஆட்களைத் தெரிவு செய்தல் வேண்டுமென்பதுடன் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துக்காக அத்தகைய ஆட்களின் பெயர்களை விதந்துரைத்தலும் வேண்டும்.

(3) இரண்டாம் உபவிதியின்கீழ் உரிமம் பெற்றவரின் விதப்புரையைப் பெற்றதன்மேல், ஆணைக்குழுவானது தவிசாளராக நியமிக்கப்படுவதற்கு அத்தகைய ஆட்களில் ஒருவரை அங்கீகரித்தல் வேண்டும்.

(4) உரிமம் பெற்றவர், தவிசாளராக நியமிப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட ஆள் மின்சார தொழிலிலுள்ள ஏதேனும் உருவகம் தொடர்பில் அல்லது அரங்கின் பணிகளை நிறைவேற்றுவதில் அக்கறை முரண்பாடொன்றின் எழுச்சியை அளிக்கின்றதான ஏதேனும் நேரடியான அல்லது நேரடியாகவல்லாத அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருக்கவில்லையென்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6. அரங்கின் பணியாட்தொகுதியானது குறைந்தபட்சம் பின்வரும் ஊழியர் கோப்பு பதவிநிலைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் –

(அ) அரங்கின் செயலாளரொருவர்;

(ஆ) கணினி தொழிற்படுத்துநரொருவர்; அத்துடன்

(இ) அலுவலக உதவியாளரொருவர்.

(2) (இதனகத்துப்பின்னர் “செயலாளர்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அரங்கின் செயலாளர் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் தகைமைகளைக் கொண்டிருப்பதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) செயலாளர் அதன் பணிகளை நிறைவேற்றுவதில் அரங்குக்கு உதவியளித்தல் வேண்டுமென்பதுடன் முறையான ஏற்றுக்கொள்ளுதலின்கீழ் எல்லா இன்னல்களையும் பெறுதலும், பதிவுகளை வைத்திருத்தலும் மற்றும் பெறப்பட்ட எல்லா இன்னல்கள் பற்றிய தரவுத் தளமொன்றை பேணுதலும் வேண்டும்.

7. அரங்கின் ஒவ்வொரு உறுப்பினரும், அத்தகைய உறுப்பினர் பதவிவிலகுவதன்மூலம், இறப்பின் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய, நியமனத் திகதியிலிருந்து ஐந்தாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீளநியமிக்கப்படுவதற்கு தகவுடையவராகவிருத்தல் வேண்டும்:

ஆயின், தவிசாளர், பதவிக்காலம் முடிவுறாதிருத்தல் எவ்வாறிருப்பினும், அறுபத்தைந்து வயதை எய்துவதன்மேல் பதவி வகித்தல் இல்லாதொழிதல் வேண்டும். வேறு உறுப்பினர்கள் அவர்களின் அந்தந்த பதவிக்காலங்கள் முடிவுறும் வரையில் பதவி வகித்தலைத் தொடரலாம்.

8. தவிசாளர் பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் அவரது பதவியை வறிதாக்குவாராயின், ஆணைக்குழுவானது அத்தகைய பதவிக்காலத்தின் முடிவுறாத பாகத்துக்கு தவிசாளராக நியமிக்கப்படுவதற்கு 5 ஆம் விதியின் (2) ஆம் உபவிதியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆட்களிலிருந்து வேறெவரேனும் ஆளை அங்கீகரிக்கலாம்.

9. நபரொருவர், அத்தகைய ஆள் –

(அ) இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருப்பின் அல்லது இல்லாதொழிக்கப்பட்டிருப்பின்;

(ஆ) நியமிக்கப்படுவதற்கு முன்னரான மூன்று ஆண்டுகளினுள், பாராளுமன்றத்தின், மாகாண சபையின் அல்லது உள்ளூர் அதிகார சபையின் உறுப்பினரொருவராகவிருப்பின் அல்லது உறுப்பினரொருவராகவிருந்திருப்பின்;

(இ) இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவராக காணப்படின் அல்லது வெளிப்படுத்தப்படின்;

(ஈ) எவ்வாளொருவர் இலங்கையின் அல்லது வேறேதேனும் நாட்டின் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்றவரொருவராக அல்லது வங்கிமுறிந்தவராக வெளிப்படுத்தப்படுகின்றாரோ அவ்வாளொருவர் பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்கிமுறிந்தவராகவிருப்பின்;

(உ) இலங்கையின் அல்லது வேறேதேனும் நாட்டின் நீதிமன்றத்தினால் ஏதேனும் குற்றவியல் தவறொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்; அல்லது

(ஊ) அரங்கின் உறுப்பினரொருவராக அத்தகைய ஆளுக்கு குறித்தளிக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுவதிலிருந்து அத்தகைய ஆளைத் தடைசெய்கின்றதான ஏதேனும் உள அல்லது உடல் இயலாமைக்கு அமைந்திருப்பின்,

அரங்கின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையற்றவராகவிருத்தல் வேண்டும்.

10. (1) அரங்கின் ஏதேனும் வெற்றிடம் எழுவதன்மேல் விடயத்துக்கேற்றவாறாக, ஆணைக்குழு அல்லது உரிமம் பெற்றவர் அத்தகைய வெற்றிடம் ஏற்பட்ட திகதியிலிருந்து அறுபது நாட்களினுள் வெற்றிடத்தை நிரப்புவதற்கு உடனடியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(2) அரங்கின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் அரங்கின் அமைத்துருவாக்கத்திலான ஏதேனும் குறைப்பாடின் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதல் ஆகாது.

11. அரங்கின் உறுப்பினர்களினதும் பணியாட்தொகுதியினரதும் சேவையின் நியதி நிபந்தனைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் உரிமம் பெற்றவரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

12. ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளுக்கமைய, உரிமம் பெற்றவர் அரங்கின் பயனுள்ள செயற்பாட்டுக்கு அவசியமான உட்கட்டமைப்பு மற்றும் மனிதவள வசதிகளை வழங்குதல் வேண்டும்.

13. அரங்கின் அலுவலகம் உரிமம் பெற்றவரின் அலுவலகம் எல்லா வேலை நாட்களின் வேலை நேரத்தின் போது திறந்திருத்தல் வேண்டும்.

14. அரங்கானது பெறப்பட்ட இன்னல்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், அது தோதானதெனக் கருதுகின்றவாறு அதன் நடவடிக்கைகளை நடாத்துவதற்கான முறை, உரிமம் பெற்றவரின் வழங்குகை இடப்பரப்பினுள்ள இடம், திகதி மற்றும் நேரம் என்பவற்றைத் தீர்மானித்தல் வேண்டும்.

15. உரிமம் பெற்றவர், காலத்துக்குக் காலம், அது தோதானதெனக் கருதுகின்றவாறான அல்லது ஆணைக்குழு பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் அரங்கினதும் அதன் பணிகளினதும் உரிய பகிரங்கப்படுத்தலை வழங்குதல் வேண்டும்.

16. ஏதேனும் இலத்திரனியல் வழிமுறையிலான தொடர்பாடல் உட்பட அரங்கின் அலுவலக அஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கங்கள் மற்றும் வேறேதேனும் தொடர்பு தகவல்கள் பாவனையாளர்களுடன் இடைமுகமொன்றைக் கொண்டிருக்கின்றதாக காட்சிப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் பாவனையாளர்களின் மின்சாரப் பட்டியலில் முறையாக வெளியிடப்படுதலும் வேண்டும்.

## பாகம் II

## நிவர்த்தி செய்கையைப் பெறுதல்

17. (1) உரிமம் பெற்றவரின் வழங்குகை இடப்பரப்பினுள்ளான மின்சார சேவைகளைப் பெறுகின்ற பாவனையாளர்கள் நிவர்த்தி செய்தலுக்காக அரங்குக்கு அவர்களின் இன்னல்களை சமர்ப்பிக்கலாம்.

(2) அரங்கானது தாமாக இன்னலொன்றைப் பெறுகின்றவிடத்து, பெறுகையின் ஏற்றுக்கொள்ளலொன்று குறிப்பீடு எண்ணொன்றுடன் உடனடியான வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன் இன்னலொன்று அஞ்சல் மூலம் அல்லது வேறேதேனும் இலத்திரனியல் வழிமுறைகளினூடாக பெறப்பட்டிருக்கின்றவிடத்து, பெறுகையின் ஏற்றுக்கொள்ளலொன்று அரங்கினால் அத்தகைய இன்னலைப் பெறுகின்ற நான்கு வேலை நாட்களினுள் பாவனையாளருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(3) இன்னலொன்று அரங்கொன்றுக்கு வாய்மொழியில் செய்யப்படுகின்றவிடத்து, அது எழுத்தில் வழங்கப்படுதலும் பாவனையாளரின் கையொப்பம் செயலாளரினால் அதில் பெறப்படுதலும் வேண்டுமென்பதுடன் தரவுத்தளத்தில் அதனை பதிவேற்றுதலும் வேண்டும். அதன் பிரதியொன்று இயைபான பாவனையாளருக்கு உடனடியாக அளிக்கப்படுதலும் வேண்டும்.

18. (1) பதினேழாம் விதியின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட பாவனையாளரொருவரின் இன்னலொன்றைப் பெற்றதன்மேல், செயலாளர் முறைப்பாடு செய்யப்பட்ட இன்னல் தொடர்பில் சுருக்கமுறையான அறிக்கையொன்றுடன் சேர்த்து தவிசாளருக்கு இன்னலை ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

(2) ஓராம் உபவிதியின்கீழான அத்தகைய ஆற்றுப்படுத்தலின்மேல், தவிசாளர் இன்னலின் தன்மையினைக் கருத்திற்கொண்டு –

(அ) இன்னலானது உரிமம் பெற்றவரினால் தீர்த்து வைக்கப்படக்கூடியதாயினுஞ்சரி; அல்லது

(ஆ) இன்னலானது அரங்கினால் தீர்த்து வைக்கப்படவேண்டியதாயினுஞ்சரி;

என்பதனைத் தீர்மானித்தல் வேண்டும்.

19. (1) தவிசாளர், இன்னலானது உரிமம் பெற்றவரினால் தீர்த்துவைக்கப்படலாமென தீர்மானிக்கின்றவிடத்து, தவிசாளர் உரிமம் பெற்றவருக்கு அத்தகைய இன்னலை ஆற்றுப்படுத்தல் வேண்டுமென்பதுடன் உரிமம் பெற்றவர்,

உரிமம் பெற்றவரினால் அத்தகைய இன்னல் பெறப்படும் தேதியிலிருந்து பதினான்கு நாட்களினுள் இன்னலை தீர்த்துவைப்பதற்கான ஒவ்வொரு முயற்சியையும் எடுத்தல் வேண்டும்.

(2) உரிமம் பெற்றவர் (1) ஆம் உபவிதியின்கீழ் குறித்துரைக்கப்பட்ட நேரகாலப்பகுதியினுள் அத்தகைய இன்னலைத் தீர்த்துவைப்பதற்குத் தவறின், அல்லது பாவனையாளர் உரிமம் பெற்றவரினால் உத்தேசிக்கப்பட்ட தீர்வுகளில் திருப்தியுறாதிருப்பின், உரிமம் பெற்றவர் அல்லது பாவனையாளர் விடயத்துக்கேற்றவாறாக, உரிமம் பெற்றவரினால் அத்தகைய இன்னல் பெறப்பட்ட தேதியிலிருந்து இருபத்தொரு நாட்களினுள் அரங்குக்கு அத்தகைய தவறுகை அல்லது திருப்தியின்மையை அறிக்கையிடுதல் வேண்டும்.

20. (1) (அ) தவிசாளர் இன்னலானது 18 ஆம் விதியின்கீழ் அரங்கினால் தீர்த்து வைக்கப்படுதல் வேண்டுமென தீர்மானிக்கப்படுகின்றவிடத்து; அல்லது

(ஆ) உரிமம் பெற்றவர் இன்னலைத் தீர்த்து வைப்பதற்கு தவறுகின்றவிடத்து, அல்லது பாவனையாளர் 19 ஆம் விதியின்கீழ் உரிமம் பெற்றவரினால் உத்தேசிக்கப்பட்ட தீர்வில் திருப்தியுறாதிருக்கின்றவிடத்து,

தவிசாளர் அரங்குக்கு இன்னலை ஆற்றுப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் செயலாளர் இன்னலின் மீள மீளாய்வுக்கு அரங்கின் உறுப்பினர்களின் கூட்டமொன்றை கூட்டுதலும் வேண்டும்.

(2) இன்னலின் மீள மீளாய்வில், அரங்கின் உறுப்பினர்கள் பரஸ்பரமாக ஏற்புடையற்பாலதான தீர்வொன்றினை அடைவதனால் இன்னலைத் தீர்த்து வைப்பதற்கு முயற்சித்தல் வேண்டும்.

(3) அரங்கின் எல்லா உறுப்பினர்களும் தீர்வொன்றின் மேல் உடன்படுகின்றவிடத்து, அல்லது தவிசாளரும் குறைந்தபட்சம் அரங்கின் ஒரு உறுப்பினர் தீர்வொன்றின் மேல் உடன்படுகின்றவிடத்து, தவிசாளர் பாவனையாளருக்கு அறிவித்தல்களை வழங்குவதற்கு செயலாளருக்கும் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியில் அரங்கின் முன் தோன்றுவதற்கு உரிமம் பெற்றவருக்கும் அறிவுறுத்துதல் வேண்டும்.

(4) உரிமம் பெற்றவருக்கான அறிவித்தலானது இன்னலின் பிரதியொன்றினாலும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஏதேனும் ஆவணங்கள் ஏதேனுமிருப்பின், அதன் பிரதியொன்றினாலும் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(5) பாவனையாளரொருவர் 17 ஆம் விதியின்கீழ் அரங்குக்கு அவரால் சமர்ப்பிக்கப்பட்ட இன்னலொன்று தொடர்பில் பாவனையாளரை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு பாவனையாளர் ஆதரித்து வாதாடுநரொருவரின் உதவியைப் பெறலாம்.

21. (1) பாவனையாளரும் உரிமம் பெற்றவரும் அரங்கின் முன்னர் பிரதிநிதித்துவங்களை செய்தல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் ஆதரவளிக்கும் ஆவணங்களை அல்லது வேறு இயைபான விடயங்களைச் சமர்ப்பிக்கலாம். அரங்கானது, அரங்கின் உறுப்பினர்களினால் அடையப்பட்ட தீர்வினை அறிவிப்பதற்கு முன்னர், அரங்கின் முன்னிலையில் பிரதிநிதித்துவங்களைச் செய்வதற்கு இரு திறத்தவர்களுக்கும் சமமான வாய்ப்புக்களை வழங்குதல் வேண்டும்.

(2) உரிமம் பெற்றவரினால் அல்லது பாவனையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரதிநிதித்துவப்படுத்தல்கள் மற்றும் ஆதரவளித்தல் விடயங்களைக் கவனத்திற்கொள்வதன்மேல், அரங்கினால் அடையப்பட்ட தீர்வானது பாவனையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட நிகழ்வுகளைக் கருத்திற்கொண்டு திருத்தப்படுவதற்குத் தேவைப்படுத்துகின்றதாக அரங்குக்கு தோன்றுகின்றவிடத்து, தவிசாளர் அதே நேரத்தில், அரங்கின் உறுப்பினர்களின் கலந்தாலோசனையுடன் உத்தேசிக்கப்பட்ட தீர்வினை மீளக் கவனத்திற்கொள்ளலாம்.

(3) பாவனையாளர் 20 ஆம் விதியின்கீழ் அரங்கினால் அடையப்பட்ட தீர்வினால் திருப்பதியுறாதிருக்குமிடத்து, அல்லது அரங்கு அவ்வாறு முடிபு செய்கின்றவிடத்து, இன்னலானது தீர்மானத்துக்காக ஆணைக்குழுவுக்கு குறிப்பீடுசெய்யப்படுதல் வேண்டும்.

22. அரங்கானது இன்னலொன்றுக்கான திருப்திகரமான தீர்மானத்துக்கு அவசியமானதாக அதனைக் கருதுகின்றவிடத்து, அது அதன் உடைமையிலிருக்கின்ற அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழிருக்கின்ற எவையேனும் ஆவணங்களை அல்லது தகவலைச் சமர்ப்பிப்பதற்கு இரு திறத்தவருள் ஒருவரைத் தேவைப்படுத்தலாம் அல்லது அரங்கானது அரங்கு அவசியமெனக் கருதக்கூடியவாறான, தனியாள் பரிசோதனையொன்றை தாமாக அல்லது தகுதிவாய்ந்த ஆளொருவரினால் நடாத்தலாம்.

23. அரங்கானது நீதி, சமத்துவம் மற்றும் சிறந்த மனசாட்சி ஆகிய கோட்பாடுகளினால் வழிகாட்டப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க அதன் சொந்த நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

24. பாவனையாளர் அல்லது உரிமம் பெற்றவர் ஒன்றில் தாமாக அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் ஆளினூடாக அரங்கின் முன்னர் தோன்றலாம்.

25. (1) அரங்கானது, அரங்கினால் இன்னலின் ஏற்றுக்கொள்ளுதல் தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் 17 ஆம் விதியின்கீழ் முறையாக சமர்ப்பிக்கப்பட்ட இன்னலொன்று தொடர்பில் தீர்வொன்றை அடைவதற்கு முயற்சித்தல் வேண்டும்.

(2) அரங்கானது (1) ஆம், உபவிதியில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் தீர்வொன்றை அடைவதற்கு இயலாதிருக்குமிடத்து, அது அத்தகைய தாமதத்துக்கான காரணங்களைப் பதிவுசெய்தல் வேண்டுமென்பதுடன் ஆணைக்குழுவுக்கு அதன் காலாண்டு அறிக்கையில் அத்தகைய காரணங்களை உள்ளடக்குதலும் வேண்டும்.

26. அரங்கானது இன்னலொன்றின் ஏற்றுக்கொள்ளலின் பின்னரான மற்றும் இறுதித் தீர்வொன்றை அடைவதற்கு முன்னரான எந்நேரத்திலும் மாறாநிலையினைப் பேணிக்காத்தலுக்கெனப் பாவனையாளருக்கான மேலதிக பங்கத்தை தடைசெய்தல், அல்லது இன்னலின் தீர்மானம் முடிவுறாதிருக்கும் இரு திறத்தவருள் ஒருவரின் நிதிசார் இழப்பினைத் தவிர்ப்பதற்கு அவசியமானதாக அது கருதுகின்றவாறான அத்தகைய இடைக்கால வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

27. அரங்கின் ஒவ்வொரு தீர்வும் நடவடிக்கையும் அத்தகைய நடவடிக்கைகளில் பங்குபற்றுகின்ற அரங்கின் எல்லா உறுப்பினர்களினாலும் கையொப்பமிடப்படுதல் வேண்டும். அரங்கினால் வழங்கப்பட்ட அல்லது அறியத்தரப்பட்ட அத்தகைய ஏதேனும் தீர்வின் ஒவ்வொரு பிரதியும் செயலாளரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

28. அரங்கினால் அடையப்பட்ட எல்லா இறுதித் தீர்வுகளும் அரங்கினால் எடுக்கப்படும் ஏதேனும் இடைக்கால வழிமுறைகளும், இன்னலுற்ற திறத்தவருக்கும் அத்துடன், பயன்கொடுப்பதற்கும் அல்லது எத்தேதியில் தீர்வு அடையப்படுகின்றதோ அல்லது வழிமுறைகள் எடுக்கப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து மூன்று நாட்களினுள் அத்தகைய தீர்வு அல்லது வழிமுறைகள் நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பாகவுள்ள எவரேனும் ஆளுக்கும் அறியத்தரப்படுதல் வேண்டும்.

29. (1) அரங்கானது, எக்காலப்பகுதியினுள் தீர்வுக்கு பயன் கொடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டுமோ அக்காலப்பகுதியொன்றினுள் அதன் தீர்வில் குறித்துரைக்கின்றவிடத்தன்றி, உரிமம் பெற்றவர் அத்தகைய தீர்வு பெறப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களினுள் அத்தகைய நடவடிக்கையை எடுத்தல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க அரங்கிற்கு அறிவித்தலும் வேண்டும்.

(2) அரங்கானது, உரிமம் பெற்றவரினால் செய்யப்பட்ட கோரிக்கையொன்றின்மேல், காரணங்கள் எழுத்தில் பதிவுசெய்யப்படுவதற்காக தீர்வின் தேதியிலிருந்து ஒரு மாதத்தை விஞ்சாத மேலதிக காலப்பகுதியொன்றுக்கு தீர்வுக்குப் பயன்கொடுப்பதற்காக காலப்பகுதியினை நீட்டிக்கலாம்.

30. உரிமம் பெற்றவர், 29 ஆம் விதியின்கீழ் அளிக்கப்பட்ட அல்லது நீட்டிக்கப்பட்ட காலப்பகுதியினுள் அரங்கின் தீர்வொன்றுக்கு பயன்கொடுப்பதற்குத் தவறுகின்றவிடத்து, அரங்கானது அத்தகைய தவறுகையை உரிமம் பெற்றவருக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அது தோதானதெனக் கருதக்கூடியவாறாக ஆணைக்குழுவினால் எடுக்கப்படவேண்டிய அத்தகைய நடவடிக்கைக்காக, அத்தகைய காலப்பகுதி முடிவுறும் தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் ஆணைக்குழுவுக்குக் கருமத்தை அறிக்கையிடுதலும் வேண்டும்.

31. முப்பதாம் விதியின்கீழ் அறிக்கையொன்றைப் பெறுவதன்மேல், ஆணைக்குழுவானது அரங்கினால் அடையப்பட்ட தீர்வின் இணங்கியொழுகுகையை உறுதிப்படுத்துவதற்கு, கருமத்தின் நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு, அது தோதானதெனக் கருதுகின்றவாறாக அத்தகைய நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

## பாகம் III

## பொது

32. ஆணைக்குழுவின் வழிகாட்டுநெறியுடன் ஒவ்வொரு உரிமம் பெற்றவரும் எத் தேதியில் இவ்விதிகள் நடைமுறைக்கு வருகின்றனவோ அத்தேதியிலிருந்து பதினெட்டு மாதங்களினுள் அரங்கின் இன்னல் சமர்ப்பிப்பினையும் நிவர்த்தி செய்தல் செயன்முறையையும் எண்ணிம மயப்படுத்தல் வேண்டுமென்பதுடன் பின்வருவதனை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பேற்றலும் வேண்டும்:-

(அ) அரங்கிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பாவனையாளர் இன்னல்களைப் பதிவுசெய்வதற்கு, தேடியறிவதற்கு மற்றும் பதிதலுக்கான முழுமையான எண்ணிமமயப்படுத்தப்பட்ட முறைமையொன்றைத் தாபித்தலும் பேணுதலும்;

(ஆ) இன்னலொன்று உரிமம் பெற்றவரின் ஈடுபாட்டினால் தீர்த்து வைக்கப்படக்கூடியதா அல்லது இல்லையா என்ற தகவலைப் பெறுவதற்கென எவரேனும் திறத்தவரை இயலச் செய்வதற்கு ஆணைக்குழுவின் வலைத்தளத்திலும் ஒவ்வொரு உரிமம் பெற்றவரின் வலைத்தளத்திலும் எண்ணிம வாயிலொன்றைக் கிடைக்கக்கூடியதாக்குதல்;

(இ) பாவனையாளர், உரிமம் பெற்றவருடன் கலந்தாலோசித்தல் வேண்டுமென எண்ணிம வாயில் குறிப்பிடுகின்றவிடத்து அல்லது பாவனையாளர், எண்ணிம வாயிலினூடாக வழங்கப்பட்ட மறுமொழி தொடர்பில் மேலதிக

தகவலை தேவைப்படுத்துகின்றவிடத்து, அந்தந்த அரங்குக்கு எழுத்தில் இன்னலொன்றின் சமர்ப்பித்தலுக்கு வசதியளித்தல்;

(ஈ) பாவனையாளர் இன்னல் தொடர்பில் பெறப்பட்ட தீர்வில் திருப்தியுறாதிருக்குமிடத்து பாவனையாளரொருவரினால் ஆணைக்குழுவுக்கு இன்னலொன்றின் ஆற்றுப்படுத்தலுக்கு வசதியளித்தல்;

(உ) பதிவு செய்தல் நேரத்தில் அரங்கில் முறையிடப்பட்ட ஒவ்வொரு இன்னலுக்கும் தனித்துவமான குறிப்பீடு இலக்கமொன்றை வழங்குதல்;

(ஊ) அதே முறையினுள் ஒவ்வொரு இன்னலின் நிவர்த்தி செய்தலுக்காக எடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளினதும் பதிவுகளைப் பேணிதலும் பெறப்பட்ட எல்லா இன்னல்களினதும் முழுமையான எண்ணிம இடாப்பொன்றைப் பேணுதலும்;

(எ) ஒவ்வொரு இன்னலும் அரங்கினால் இன்னல் பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் கவனத்திற் கொள்ளப்படுகின்றதுடன் தீர்த்துவைக்கப்படுகின்றதென்பதனை உறுதிப்படுத்துதல்; அத்துடன்

(ஏ) அரங்கினால் அடையப்பட்ட தீர்வுடன் சேர்த்து, நேரொத்த இன்னலுக்கெதிராக முறைமையிலுள்ள ஒவ்வொரு இன்னல் தொடர்பிலும் அரங்கின் நடவடிக்கைகளின் நிகழ்ச்சிக் குறிப்பொன்றைப் பதிவுசெய்தல்.

33. ஆணைக்குழுவானது, எல்லா நேரங்களிலும், தீர்மானத்தை நோக்கி ஒவ்வொரு இன்னலின் வளர்ச்சியைக் கண்காணிக்கும் நோக்கத்துக்காக, அரங்கின் முன்னரான எல்லா நடவடிக்கைகள் உட்பட ஒவ்வொரு இன்னலையும் கையாளுகின்ற முழுமையான வரலாற்றினை பார்வையிடுவதற்கும் மீளாய்வுசெய்வதற்கும் அணுக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

34. அரங்கானது எம்முறையில் இன்னல்கள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கின்றதோ அம்முறையுடன் சேர்த்து பெறப்பட்ட தீர்த்து வைக்கப்பட்ட மற்றும் முடிவுறாதுள்ள அத்தகைய இன்னல்களின் எண்ணிக்கையைத் தந்து, ஒவ்வொரு காலாண்டின் முடிவின் பின்னரான பதினைந்து நாட்களினுள் காலாண்டு அறிக்கையொன்றை உரிமம் பெற்றவருக்குப் பிரதியொன்றுடன், ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

35. அரங்கானது ஒவ்வொரு ஆண்டின் ஏப்ரல் மாதத்தின் முடிவில் அல்லது முடிவுக்கு முன்னர், முற்போந்த நிதியாண்டின் போது அரங்கின் செயற்பாடுகள் பற்றிய வருடாந்த அறிக்கையொன்றை ஆணைக்குழுவுக்குப் பிரதியொன்றுடன் உரிமம் பெற்றவருக்கும் அளித்தல் வேண்டும்.

36. அரங்கானது 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தனிப்பட்ட தரவு பாதுகாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, எப்பாவனையாளர்கள் இவ்விதிகளின்கீழ் இன்னல்களைச் சமர்ப்பிக்கின்றனரோ அப்பாவனையாளர்களின் தனிப்பட்ட தரவு கையாளப்படுதல் வேண்டும்.

37. இவ்வதிகளில், சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலொழிய,-

"சட்டம்" என்பது, 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, மின்சாரச் சட்டம் எனப் பொருள்படும்;

"பாவனையாளர்" என்பது, ஓர் உரிமம் பெற்றவரினால் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது பொதுமக்களுக்கு மின்சாரம் வழங்குகின்ற தொழிலில் ஈடுபட்டுள்ள வேறெவரேனுமாளினால் தனிப்பட்ட பாவனைக்காக மின்சாரம் வழங்கப்படுகின்ற எவரேனுமாள் எனப் பொருள்படும் என்பதுடன் மின்சாரத்தைப் பெறுகின்ற நோக்கத்துக்காக எவ் ஆளின் வளவுகள் அப்போதைக்குத் தொடுக்கப்படுகின்றனவோ அவ் எவரேனுமாளையும் உள்ளடக்கும்; அத்துடன் எவரேனும் எதிர்காலப் பாவனையாளரையும் உள்ளடக்கும்;

"பாவனையாளர் வழக்கறிஞர்" என்பது, உரிய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதன்மேல் ஆணைக்குழுவுடன் பதிவுசெய்யப்பட்டதும் இன்னல் கையாளுகைச் செயன்முறை முழுவதிலுமாக அவர்களின் உரிமைகளைக் காப்பதில் இலங்கையிலுள்ள பாவனையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கபட்டதுமான ஆளொருவர் அல்லது உருவகமொன்று எனப் பொருள்படும்;

"இலத்திரனியல் வழிமுறைகள்" என்பது, ஊடகத்தைக் கவனத்திற் கொள்ளாமல், எம்முறை மூலம் தகவல் இலத்திரனியலினால், காந்தத்தினால், ஒளிக்கற்றையினால் அல்லது வேறேதேனும் ஒத்த திறன் மூலம் பிறப்பிக்கப்படுகின்றதோ, அனுப்பப்படுகின்றதோ, அல்லது சேமிக்கப்படுகின்றதோ அவ் ஏதேனும் முறை எனப் பொருள்படும்;

"இன்னல்" என்பது, சட்டத்தின்கீழ், அதன்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விதி அல்லது ஒழுங்குவிதியின்கீழ், ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஏதேனும் கொள்கைப் பணிப்பு அல்லது கட்டளையின்கீழ் அல்லது

அந்நேரத்தில் வலுவிலுள்ள வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் உரிமம் பெற்றவரொருவரின் மீது விதிக்கப்பட்ட ஏதேனும் கடமையின் புரிகையின் தரம் தன்மையில் அல்லது முறையிலான ஏதேனும் தவறு, குறைப்பாடு, பற்றாக்குறை, போதாமை அல்லது தவறுகையைச் சார்த்துகின்ற பாவனையாளரொருவரினால் அல்லது எவ் உரிமம் பெற்றவரினால் பாவனையாளரின் கோரிக்கைகள் பாதகமான முறையில் பாதிக்கப்பட்டிருக்கின்றதோ அவ் உரிமம் பெற்றிவரினால் செய்யப்பட்ட ஏதேனும் முறைப்பாடு எனப் பொருள்படும் என்பதுடன் பின்வருவனவற்றை உள்ளடக்குதலாகாது –

(அ) ஏதேனும் கோரிக்கையானது பின்வருமாறு செய்யப்பட்டிருப்பின், உரிமம் பெற்றவரினால் வழங்கப்பட்ட ஏதேனும் சேவை அல்லது அத்தகைய சேவையுடன் தொடர்புபட்ட ஏதேனும் அதுக்குப்பின்னரான சேவை தொடர்பில் பாவனையாளரினால் செய்யப்பட்ட அத்தகைய கோரிக்கை;

(i) முதலாவது சந்தர்ப்பத்தில்; அல்லது

(ii) அத்தகைய சேவையை பெறுதல் தொடர்பில் ஆணைக்குழுவின் வலைதளத்தில் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிகளை பின்பற்றாது;

(ஆ) அதே கருமம் தொடர்பிலானதும் அதே பாவனையாளருக்கும் உரிமம் பெற்றவருக்குமிடையிலான வழக்கு நடவடிக்கைகள் ஏதேனும் நீதிமன்றத்தின், நியாயச் சபையின் அல்லது நடுத்தீர்ப்பாளர் அல்லது வேறேதேனும் அதிகாரசபையின் முன்னர் முடிவுறாதிருத்தல் தொடர்பில் அல்லது தீர்வையொன்று, அளிப்பொன்று அல்லது இறுதி கட்டளையொன்று அத்தகைய ஏதேனும் நீதிமன்றத்தினால், நியாயச் சபையினால், நடுத்தீர்ப்பாளர் அல்லது வேறேதேனும் அதிகாரசபையினால் ஏலவே ஆக்கப்பட்டிருத்தல் தொடர்பில்; அத்துடன்

(இ) இன்னலானது எத்தேதியில் செயற்பாடுக்கான காரணம் எழுந்திருக்கின்றதோ அத்தேதியின் பின்னரான இரண்டு ஆண்டுகளுக்குமேல் சமர்ப்பிக்கப்பட்டிருக்குமிடத்து.

"உரிமம் பெற்றவர்" என்பது, எவ்வாளுக்கு உரிமொன்று மின்சார விநியோகிப்புடன் தொடர்புபட்ட செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக சட்டத்தின் நியதிகளின்படி வழங்கப்பட்டிருக்கின்றதோ அவ் எவரேனுமாள் எனப் பொருள்படும்;

" இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு" என்பது, 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எனப் பொருள்படும்.

EOG 09 - 0190

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.